## மாலிம்பட பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 30 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 30 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மாலிம்பட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

----------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான 03 நூலகங்களைச் சேர்ந்த ரூபா 30,738 பெறுமதியான புத்தகங்கள் காணப்படவில்லை என 2014 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டில் வெளிப்படுத்தப்பட்டதுடன் அப் பெறுமதியை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்காக நடவடிக்கை எடுக்காமையால் சொத்துக்கள் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆண்டின் போது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த வர்த்தக வரி ரூபா 9,790 தொடர்பாக தண்டப் பணம் அறவிடப்படுவதற்கு முன்னர் நாட்குறிப்பு இலக்கம் 06 இன் மூலம் கடன்பட்டோர் செலவு வைக்கப்பட்டு திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் அதே தொகையால் கடன்பட்டோர் பெறுமதி குறைந்திருந்தது.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அனுமதிப்பத்திரக் கட்டணத்தில் பெற வேண்டிய தொகை ரூபா 32,140 தொகை எனினும், அப் பெறுமதியினை கணக்கீடு செய்யப்படாமல் நிதிக் கூற்றுக்களில் இருந்து கைவிடப்பட்டுள்ளது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

--------------------------------------------------------------------------------------

05 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா 2,237,095 காணப்பட்டதுடன் துணைப் பதிவேட்டின் பிரகாரம் மற்றும் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் பெறுமதி ரூபா 2,374,928 ஆக காணப்பட்டமையால் ரூபா 137,833 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டன.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

--------------------------------------------------------------------------------------------

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 51,992 ஆகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 30,447,298 ஆகும்.

(இ) தீர்க்கப்படாத கணக்குகள்

------------------------------------------

(i) கடந்த 18 வருடங்களுக்கு முன்னர் இருந்து முன்கொண்டு வரப்பட்டு காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 1,295,398 இற்கான வருமானத்தினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் இருந்து முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 1,319,780 பெறுமதியான கடன்கொடுத்தோரினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 49,628,662 பெறுமதியான 03 கணக்கு விடயங்கள் தொடர்பான கணிப்பீட்டு அறிக்கை, மீதியை உறுதிப்படுத்தும் கடிதம் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

-----------------------------------------------------------------------------------------------------

சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கணனிகள் மற்றும் துணைக் கருவிகள் தொடர்பாக பதிவேடு ஒன்று 2002 நவம்பர் 28 திகதிய இலக்கம் ஐஏஐ2002/02 கொண்ட திறைசேரி சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பேணப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,450,103 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 263,252 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

---------------------------------

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

----------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பிட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயங்கள் | மதிப்பீட்டு | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரி | 1,466 | 799 | 97 |
| வாடகை | 2,074 | 2,096 | 252 |
| ஏனைய வருமானங்கள் | 31,387 | 10,579 | 31,124 |

2.2.2 வீத வரி

---------------

மீளாய்வாண்டிற்காக வீத வரி பில்போடப்பட்டவை ரூபா 191,906 ஆக காணப்பட்டதுடன் பில்போடப்பட்டவைகளில் பெறுவனவுகள் ரூபா 2,089 ஆகும். அதன் பிரகாரம் அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 01 ஆகும். 2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரியின் பெறுமதி ரூபா 102,847 ஆக காணப்பட்டதுடன் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முன்னைய ஆண்டு தொடர்பாக பெறுவனவுகள் ரூபா 38,548 ஆகக் காணப்பட்டமையால் அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 37 ஆகும்.

2.2.3 வாடகை

----------------

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட வாடகை மீதி ரூபா 103,984 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது பெறுவனவுகள் ரூபா 12,799 ஆக காணப்பட்டமையால் பெறுவனவுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 12 ஆகும்.

2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய தொகை பின்வருமாறு

| | | ரூபா. |
|---|---|---|
| (அ) | நீதி மன்றத் தண்டப் பணம் | 894,759 |
| (ஆ) | முத்திரைக் கட்டணம் | 8,312,510 |

2.2.5 காணி ஏல விற்பனை வரி

--------------------------------------------

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் இலக்கம் 154(1) உப பிரிவின் பிரகாரம் காணிகளை துண்டுகளாக பிரித்து விற்பனை செய்யும் போது காணி விற்பனை மூலம் கிடைத்த பணத்தில் நூற்றிற்கு 1 இற்கு சமமான வரியொன்று விற்பனையாளரிடம் அறவிடப்பட வேண்டும். எனினும் சுல்தானாகொட, அகுருகொடயில் அமைந்துள்ள நடவ்வத்த என்ற காணியை ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யும் போது 2015 மே 31 திகதி அளவில் பணம் ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்த

பணத்தை செலுத்தும் படி 1992 ஜூலை 31, அக்டோபர் 19, 2006 மே 20, 2008 ஜூலை 01, 2008 அக்டோபர் 19 மற்றும் 2010 பெப்வரி 23 ஆகிய திகதிகளில் விற்பனை செய்த நிறுவனத்திற்கு எழுத்து மூலமாக அறிவித்திருந்த போதிலும் பணம் ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாலிம்பட ஸென்ட்ரல் பார்க் நாகந்தகொடவத்த என்ற காணி 2000 ஜூலை 2 திகதி 341/2000 துணைப் பங்கீடுகளின் கீழ் 203 துண்டுகளுக்கு பகிரப்பட்டிருந்ததுடன் அவற்றில் 9 துண்டுகளில் இருந்து மாத்திரம் நூற்றிற்கு 1 இற்கான வரியாக ரூபா 7,757 அறவிடப்பட்டிருந்ததுடன் 194 துண்டுகள் தொடர்பாக நூற்றிற்கு 1 இற்கான வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் உப பிரிவு 154(1) இன் பிரகாரம் வரி அறவிடப்படாமையால் உப பிரிவு 154(2) இன் பிரிவின் பிரகாரம் சபை செயலாளரினால் நூற்றிற்கு 1 இற்கான வரி அறவீடுகள் செலுத்தாமை தொடர்பாக அப் பிரதேச சபை அடங்கும் பிரதேசத்தின் நீதி அதிகாரமுடைய நீதிவான் நீதிமன்றம் ஒன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும் எனினும் அது நடைபெற்றிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

----------------------------------------------------

3.1.1 ஸென்ட்ரல் பார்க் நீர் திட்டம்

---------------------------------------------------

மாலிம்பட நாகந்தகொட வத்த என்ற காணியை ஸென்ட்ரல் பார்க் பேரில் 2000 ஜூலை 21 திகதி வரைபு இலக்கம் 314/2000 கொண்ட துண்டு வரைபின் படி ஏல விற்பனையில் விற்பனை செய்வதற்காக அனுமதி வழங்கும் போது குழாய் நீர் வழங்கல் நிபந்தனை ஒன்றாக குறிப்பிட்ட ஏல விற்பனை கம்பனி இணங்கியிருந்தது.

ஏல விற்பனை கம்பனியின் 2000 ஜூலை 05 திகதிய கடிதத்தின் பிரகாரம் இந்த காணியில் குடிநீர் பெறுவதற்காக போதியளவு வசதிகள் காணப்படுவதாகவும் குடிப்பதற்கு நீர் பெற்றுக்கொள்வதற்காக 22 அடி நீளம் 18 அடி அகலம் 25 அடி ஆளமாக காணப்படுவதாகவும், நீர் சேகரிக்கும் தொட்டி 18 அடி நீளம், 18 அடி அகலம் 16 அடி உயரத்திற்கு நிர்மாணித்துள்ளதாக சுற்றிக் காட்டியிருந்தனர்.

அவ்வாறு இருக்கும் போது பாதீட்டு பிரேரணைகள் 2014 பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்நடத்துவதின் கீழ் சபை ஸென்ட்ரல் பார்க் நீர்த் திட்டம் அபிவிருத்தி செய்தல் கட்டம் 1 அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ரூபா 427,450 மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு நேர்கூலி அடிப்படையில் பண்டங்கள் மற்றும் கூலி ஆக ரூபா 341,629 தொகையொன்று செலவிடப்பட்டுள்ளது.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஏல விற்பனை கம்பனி ஸென்ட்ரல் பார்க் எனப்படும் இந்தக் காணியின் குடிநீர் வழங்கும் காணியை அபிவிருத்தி செய்யும் போதே நிபந்தனை ஒன்றாக மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் சபை நிதியத்தில் இருந்து நீர் தொட்டி நிர்மாணித்தல் முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள் ஒன்று என அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2014 ஜூலை 11 நிதிக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த களஞ்சியப்படுத்தும் நீர் தொட்டிக்காக வரைபு ஒன்று அல்லது மதிப்பீட்டுக்குத் தேவையான அளவை விபரங்களும் தயாரித்திருக்கவில்லை. அத்துடன் கொள்வனவு செய்திருந்த பண்டங்கள்

மற்றும் கூலிகள் செலவிடப்பட்ட தொகையினால் நீர் தொட்டி நிர்மாணிக்கப்பட்டது என உறுதிப்படுத்தும் அளவை அறிக்கையும் தயாரித்திருக்கவில்லை.

3.1.2 பண்டக் கணிப்பீடு – 2014

---------------------------------------------

2014 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு அறிக்கை 2015 ஜனவரி 16 ஆந் திகதி சபை அங்கீகரித்திருந்ததுடன் கணிப்பீட்டு அறிக்கையின் விதப்புரைகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுத்திருக்கிவல்லை.

3.1.3 இலக்கம் PF-7353 கொண்ட கப் வண்டி

--------------------------------------------------------------------

(அ) 2014 திசெம்பர் மாதத்தில் சபைக்குக் கிடைத்திருந்த கப் வண்டி 2014 ஆண்டின் போது ரூபா 22,000 பெறுமதியான 200 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அக் காலப் பகுதி தொடர்பாக ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேலும் இந்த கப் வண்டிக்கான நாளாந்த ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாதிருந்த போதிலும் பிரதியீட்டு சாரதி ஒன்று சேர்க்கப்பட்டு ரூபா 32,062 இற்கான சம்பளமொன்று செலுத்தப்பட்டிருந்தது. மேலும் 2014 நவம்பர் 12 திகதிய இலக்கம் 25/2014 கொண்ட பொது நிருவாக சுற்று நிருபத்தின் 7 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு மாற்றமாக இந்த சாரதி சேர்க்கப்பட்டிருந்தார்.

3.1.4 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------

தென் மாகாண முதலமைச்சரின் 2013 ஏப்ரல் 22 திகதிய இலக்கம் 1807/2 கொண்ட அதி விஷேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மந்திரிமாருக்கு எரிபொருள் படி கொடுக்கப்படுவது சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சபை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காகவே. அவ்வாறாயினும் சபையின் அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே சபையின் கருமங்கள் அல்லாத பிரயாணங்களுக்காக சபை அங்கத்தவர் ஒருவருக்கு 2014 ஆண்டின் போது பிரயாணம் மேற்கொண்ட 1156 மீற்றர்களுக்காக ரூபா 18,000 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மந்திரிமாரின் பிரயாணச் செலவுப் படி கொடுப்பனவுக்காக குறிக்கோள் சார் கருமங்களுக்கு ஈடுபடுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

3.2 மனித வள முகாமைத்துவம்

------------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையினால் ஆளணிக் கோப்பு பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| பதவியணி வகைகள் | அங்கீகரிக் கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| மூன்றாம் தரம் | 01 | 02 | - | 01 |
| இரண்டாம் தரம் | 17 | 16 | 01 | - |
| ஆரம்ப தரம் | 21 | 20 | 01 | - |
| ஏனைய(அமைய, தற்காலிக,ஒப்பந்த) | - | 16 | - | - |
| | 39 | 54 | 02 | 01 |

மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி ஆணையாளரினால் பதவியினர் சம்பளம் மற்றும் மந்திரிமார் படி ஆக 12,123,207 தொகை ஒன்று மீளளிப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் ஆண்டிற்கான சம்பளங்கள் மற்றும் படிகள் என ரூபா 14,565,895 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தமையால் சபை நிதியத்திற்கு ரூபா 2,442,688 இற்கான மேலதிக செலவுப் பொறுப்பொன்று ஏற்பட்டுள்ளது.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

-----------------------------------------------------------------

4.1 பாதீட்டு கட்டுப்பாடு

--------------------------------

பாதீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள் இடையே கணிசமான அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டிருந்தமையால் சபையின் பாதீடு பயன்தரு நிதிக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

4.2 அகக் கணக்காய்வு

------------------------------------

சபையில் போதியளவு கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

--------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துக் குழு நிருவப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) நிதிக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிருவாகம்

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்